நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## C.C. No. 334 of 2024

## P.W. 1–ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி)**

............

| | | |
|---|---|---|
| பெயர் | : | கோவிந்தசாமி |
| தந்தை / கணவர் பெயர் | : | ஆறுமுகம் |
| கிராமம் | : | பி.என்.பட்டி |
| வட்டம் | : | மேட்டூர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW1** |
| வயது | : | 56 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2025–ஆம் வருடம், மே மாதம், 27–ம்ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரி ஆஜர் அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 12.15 p.m.,)

1. நான் தற்போது சின்னகாவூரில் குடியிருந்து கான்ரக்ட் வேலை செய்து வருகிறேன். இந்த வழக்கில் இறந்து போன கார்த்திக் என்னுடைய அண்ணன் மகன் ஆவார். 23.03.2024 ம் தேதி இரவு 09.00 மணியளவில் எனது பெரியப்பா மகன் பழனிசாமி என்பவர் எனக்கு போன் செய்து எனது அண்ணன் மகன்

கார்த்திக் இருச்சக்கர வாகனத்தில் செல்லும் போது எதிரிலி வாழைக்காய் லோடு ஏற்றி வந்த ஜீப் மாதிரி உள்ள 4 சக்கர வாகனம் மோதி சம்பவம் இடத்திலேயே இறந்து விட்டதாக தகவல் சொன்னார்.

2. தகவல் அறிந்து நான் சம்பவம் இடத்திற்கு இரவு 10.00 மணிக்கு சென்றபோது அரசு மருத்துவமனைக்கு எடுத்துச்சென்றதாக சொன்னார்கள். சம்பவம் இடத்தில் மூளை சிதறி கிடந்தது. அதன் பின்னர் மருத்துவமனைக்கு வந்து பார்த்த போது கார்த்திக்கு காலிலும் அடிப்பட்டு இருந்தது. மறுநாள் காலை 07.00 மணிக்கு கொளத்தூர் காவல் நிலையம் சென்று இந்த சம்பவம் தொடர்பாக புகார் கொடுத்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்தது. அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். **(அந்த புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** போலீசார் புகார் கொடுக்கும்போது பிரேத விசாரணையின் போது என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. மூலக்காட்டிலிருந்து கொளத்தூர் கடைக்கு செல்லும்போது இந்த விபத்து ஏற்பட்டது. வீட்டிற்கு திரும்பி வரும்போது விபத்து ஏற்பட்டதாக சொல்லியிருந்தால் அது தவறு. மூலக்காட்டிலிருந்து கொளத்தூர் போகும்போது பின்னால் வந்து மோதியது என்று கூறியிருந்தது என்று சொன்னால் அது தவறு. இவர் இடது பக்கமாக செல்லும்போது எதிரில் வந்த வாகனம் வலது பக்கமாக ஏறி வந்து நேருக்குநேர் மோதிவிட்டது என்று விசாரித்து தெரிந்துக்கொண்டேன்.
2. நான் சம்பவம் இடத்திற்கு போகும் போது போலீசார் அங்கு இல்லை. நான் காவல்துறை விசாரணையில் Dost வாகனம் பின்னால் வந்து மோதிவிட்டதாக தான் சொல்லியுள்ளேன் என்றால் நான் அவ்வாறு சொல்லவில்லை. இறந்தவர் எனது அண்ணன் மகன் என்பதாலும் விபத்திற்கு இழப்பீடு கோரி மனு தாக்கல் செய்துள்ளதாலும் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சம்பவம் இடத்திற்கு சென்று பார்த்தேன் என்று பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:–12.25 p.m.,

மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.

ஓம்/–நா.கோகுலகிருஷ்ணன்,
நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.